Registered as a Newspaper

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 302
திங்கட்கிழமை
23 செப்ரெம்பர் 2024

முச்சந்தி முரளி






## 12 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி

## இலங்கை வரலாற்றில் 'இரண்டாம் சுற்று' திருப்புமுனை

# ஜனாதிபதியாக இன்று அநுர பதவியேற்பு

## பிரதமராகிறார் ஹரினி அமரசூரிய; புதிய அரசின் அறிவிப்புகள் இன்று

**கொழும்பு, செப்ரெம்பர் 23**

**இலங்கை வரலாற்றில் திருப்புமுனையாக, முதல் தடவையாக இரண்டாம் சுற்றுவாக்கு எண்ணிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதியாக தெரிவான இடதுசாரி தரப்பைச்சேர்ந்த அநுரகுமார திஸாநாயக்க இன்று காலை 9 மணிக்கு பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.**

02

## 24 வருடங்களுக்குப் பிறகு இலங்கையில் பெண் பிரதமர்!

கொழும்பு, செப். 23
ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்றுள்ள நிலையில், அமையவுள்ள உத்தேச இடைக்கால அரசாங்கத்தின் பிரதம அமைச்சராக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய பதவியேற்கவுள்ளார்.

02

### மனம்வருந்துகின்றோம்

தேர்தல் முடிவுகளைத் தாங்கிய உதயனின் விசேட பதிப்பு நேற்று மாலை வெளியாகும் என வாசகர்களுக்கு தெரியப்படுத்தியிருந்தோம். இருப்பினும் திடீரென நேற்றுக் காலை நீடிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் தேர்தல் முடிவுகள் வெளியாவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உதயனின் விசேட பதிப்பு நேற்று வெளியிடப் படவில்லை. அதற்காக காத்திருந்து அசௌகரியங்களுக்குள்ளான வாசகர்களுக்காக உதயன் மனம் வருந்துகின்றான்.

(ஆ-ர்)

## நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் நடக்கும்

### அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, செப். 23
நாடாளுமன்றத் தேர்தல் மிக விரைவில் இடம் பெறவேண்டிய தேவை உள்ளதாக

02



## அநுரவுக்கு டில்லி அழைப்பு

கொழும்பு, செப். 23
இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கொழும்பி

07

## மூவின மக்களுடன் இணைந்து புதிய வரலாற்றை எழுதுவோம்

### புதிய ஜனாதிபதி அநுர அழைப்பு

கொழும்பு, செப். 23
கனவை முழுமையாகவே யதார்த்தபூர்வமானதாக

08

### நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

## யாழ்ப்பாணம் 'சாதனை'! இரண்டாம் இடத்தில் வன்னி

யாழ்ப்பாணம், செப். 23
நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை முழுவதுமாக 3 இலட்சத்து 300 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப் பட்டுள்ள நிலையில், அது மாவட்டத்தின்

15

## யாழ்ப்பாணத்தில் முழங்கிய 'சங்கு'!

யாழ்ப்பாணம், செப். 23
தமிழ்ப் பொதுவேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய அரியநேந்திரனுக்கு யாழ். தேர்தல் மாவட்டத்தில் அமோக ஆதரவளிக்

02

### இரண்டாம் சுற்று:

## சஜித்துக்கு யாழிலேயே அதிகூடிய விருப்பு வாக்கு

## 2ஆம் சுற்று வாக்கு எண்ணிக்கை: முறைகேடுகள் நடைபெற்றுள்ளன

தோல்வியடைந்த சஜித் அணி குற்றச்சாட்டு

விரிவுகள் :- பக். 15

### உங்கள் காலத்திலாவது

## இனப்பிரச்சினையை தீர்த்து வையுங்கள்

### சரவணபவன் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 23
ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்கள் ஏற்றுக்

02

## வரலாற்றில் எனக்குரிய இடம் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும்

### நாட்டு மக்களுக்கான உரையில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 23
இந்த நாட்டின் ஆட்சியாளர் என்ற வகையில் வரலாற்றில் எனக்கு உரித்தான இடம் இன்று அல்லாமல் எதிர்காலத்திலேயே தீர்மானிக்கப்படும் என்பதை நான் அறிவேன். நான் சரியான பாதையில் சென்று மக்களின்

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மாகாண ஆளுநர் நேற்றுப் பதவி துறப்பு

தென் மாகாண ஆளுநர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன நேற்று தனது பதவியை துறந்துள்ளார்.
ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட அநுரகுமார வெற்றி பெற்றுள்ளதையடுத்து தான் தென் மாகாண ஆளுநர் பதவியை இராஜினாமா செய்வதாக ஜனாதிபதி (முன்னாள்) ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-ஒ-இ)

## வயிற்றுவலியால் உயிரிழப்பு

வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர் உயிரிழந்துள்ளார்.
வரணி மாசேரியைச் சேர்ந்த தியாகாராசா ராயநிரோயன் (வயது - 36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
கடந்த 10ஆம் திகதி வயிற்றுக் குத்து காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## கோத்தா வென்ற இடங்களில் அநுரவும் வெற்றிக்கொடி

கொழும்பு, செப். 23
2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்ற 15 தேர்தல் மாவட்டங்களிலும் அநுரகுமார திஸாநாயக்கவும் வெற்றி பெற்றுள்ளார்.
எனினும், தமிழ் பேசும் மக்கள் செறிந்து வாழும் தேர்தல் மாவட்டங்களில் அவருக்கு இரண்டாம் இடமே கிடைத்துள்ளது.
வடக்கு, கிழக்கில் உள்ள யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் திகாமடுல்ல ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் சஜித் பிரேமதாஸ முதலிடம் பிடித்துள்ளார்.
கண்டி, கம்பஹா, கேகாலை, குருணாகலை, களுத்துறை, மாத்தளை, கொழும்பு, மாத்தறை, புத்தளம், மொனறாகலை, அநுராதபுரம், இரத்தினபுரி, காலி, பொலனறுவை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 15 மாட்டங்களில் அநுர முதலிடம் பிடித்துள்ளார். (அ-ஒ-44)

## வெளியேறும் வி.ஐ.பி.கள்

கொழும்பு, செப். 23
இலங்கை அரசியல் பிரமுகர்கள் பலர் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.
முன்னாள் அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே இந்தியன் ஏர்லைன்ஸின் ஏஐ-272 விமானத்தில் இந்தியாவின் சென்னைக்குப் புறப்பட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து தாய் எயார் ஏசியா விமானம் FD-141 இல் தாய்லாந்தின் பாங்கொங்குக்குப் புறப்பட்டார். இத்தே கந்தவைச் சேர்ந்த சத்தாதிஸ்ஸ தேரர் ஹொங்கொங்குக்குப் புறப்பட்டார்.
இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் மனைவியான லிமினி வினோஜா வீரசிங்க மற்றும் அவரது தந்தை திலகசிறி வீரசிங்க ஆகியோர் எமிரேட்ஸ் விமானமூடாக டுபாய் நோக்கிப் புறப்பட்டுள்ளனர். இதேவேளை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் விமானப்படை குவிக்கப்பட்டு, பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ச)

## வவுனியாவில் அநுரவுக்காக வெற்றிக்கொண்டாட்டம்

வவுனியா, செப். 23
வவுனியா நகரில் அநுரகுமார திஸாநாயக்கவின் ஆதரவாளர்கள் வெடிகொளுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.
நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றதாக நேற்றுமாலை அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து, அவரின் ஆதரவாளர்கள் வவுனியா நகரில் வெடிகொளுத்தி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.
அநுரகுமாரவுக்கு வடக்கு மாகாணத்தில் வவுனியாத் தேர்தல் தொகுதியிலேயே கூடிய வாக்குகள் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-110)

## கடன்மறுசீரமைப்புக்கு தலைமைதாங்கும் ஜப்பான் தூதுவரிடமிருந்து அநுரவுக்கு முதல் வாழ்த்து

கொழும்பு, செப். 23
ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முதலாவது வாழ்த்துச் செய்தி, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.
இலங்கையின் கடன்மறுசீரமைப்புக்கு நடவடிக்கைக்கு ஜப்பான் தலைமை தாங்குவது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

## வர்த்தக வங்கிகள் இன்று திறக்கும்!

கொழும்பு, செப். 23
விசேட பொது விடுமுறை தினத்தை அரசாங்கம் அறிவித்த போதிலும், அனைத்து வர்த்தக வங்கிகளும் நாளை திறந்திருக்கும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.
இன்று 23ஆம் திகதி வங்கி விடுமுறை தினமாக அனுசரிக்கப்படமாட்டாது என பொது நிர் வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

### யாழ்ப்பாணத்தில்...

கப்பட்டுள்ளது. 4 ஆயிரத்து 489 வாக்குகள் வித்தியாசத்திலேயே அவர் முதலிடத்தை தவறவிட்டார்.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் சஜித் பிரேமதாஸவுக்கு ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 177 வாக்குகளும், தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் காங்கேசன்துறை தேர்தல் தொகுதி மற்றும் மானிப்பாய் தேர்தல் தொகுதி ஆகியனவற்றில் மிகச் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் அரியநேந்திரன், சஜித் திடம் முதலிடத்தை இழந்தார்.
ஏனைய மாவட்டங்களில் அரியநேந்திரன் மூன்றாம் மற்றும் நான்காம் இடங்களையே பெற முடிந்தது. 2 இலட்சத்து 26 ஆயிரத்து 343 வாக்குகளை தேசிய ரீதியாகப் பெற்ற அரியநேந்திரனுக்கு 5ஆம் இடம் கிடைத்தது. (அ-ஒ-44)

### இனப்...

கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை வழங்கவேண்டும். இதன்மூலம் அவர் எதிர்பார்ப்பதைப்போன்று இலங்கையைக் கட்டியெழுப்ப முடியும். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.
புதிய ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்து அவர் அனுப்பிய ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
புதிய ஜனாதிபதிக்கு எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
தேர்தல் பரப்புரைக்காலங்களில் நீங்கள் கூறிய விடயமொன்றை நினைவுபடுத்துகின்றேன்.
'தமிழ் மக்களுக்கு என்று தனித்துவமான பிரச்சினைகள் உள்ளன. அதனை வெளிப்படுத்த தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார். அவர்களது பிரச்சினைகளை கடந்தகால அரசியல் தலைமைகள் சரியாகக் கையாளவில்லை. நான் அவர்களுடன் பேச்சு நடத்துவேன்' எனக்குறிப்பிட்டிருந்தீர்கள்.
அதற்கு அமைவாக தமிழ் மக்களும் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழ்வதற்கும் இலங்கையின் சுதந்திரத்துடன் ஒட்டி நீடித்துவரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் இதயசுத்தியுடனும் அர்ப்பணிப்புடனும் நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு எப்போதும் தமிழ் மக்களின் ஆதரவு இருக்கும் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகின்றேன் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### 24 வருடங்களுக்குப்...

இலங்கை அரசியல் வரலாற்றில் இதற்கு முன்னர் இரு பெண்கள் மாத்திரமே பிரதமர் பதவியை வகித்துள்ளனர்.
1960ஆம் ஆண்டு ஜுலை 21ஆம் திகதி முதல் 1965ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதிவரை ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமர் பதவியை வகித்துள்ளார்.
உலகில் முதல் பெண் பிரதமர் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது.
அதன்பின்னர் 1994ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19 ஆம் திகதி முதல் 1994ஆம் ஆண்டு செப்ரெம்பர் 12 ஆம் திகதிவரை சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராக பதவி வகித்தார்.
ஜனாதிபதி தேர்தலில் அவர் வெற்றிபெற்றதும் தனது தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவை சந்திரிக்கா பிரதமராக்கினார். 1994 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி முதல் 2000 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 9 ஆம் திகதிவரை அவர் பிரதமராக செயற்பட்டார்.
அதற்குப் பின்னர் ரத்னசிறி விக்ரமநாயக்க, ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ச, திமு ஜயரத்ன மற்றும் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் பிரதமர் பதவியை வகித்துள்ளனர். இவ்வாறான தொரு பின்புலத்திலேயே 2 தசாப்தங்களுக்கு பிறகு இலங்கையில் பெண்ணொருவர் பிரதமராக பதவியேற்கின்றார். (அ-ஒ-44)

### ஜனாதிபதியாக...

ஜனாதிபதி செயலகத்தில் இதற்குரிய நிகழ்வு எளிமையாக இடம்பெறவுள்ளது.
ஜனாதிபதித் தேர்தலில் முதல்சுற்று வாக்கெண்ணலின்போது, மொத்த வாக்குகளில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குப் பெறாததால் 2ஆம் சுற்று வாக்கெண்ணும் பணி இடம்பெற்றது. இதற்கமைய அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதி செய்யப்பட்டது.
தேர்தல் ஆணைக்குழுவில் நேற்றிரவு விசேட கூட்டமொன்று நடைபெற்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் பங்கேற்றிருந்தனர். இதன் போது ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றிபெற்றுள்ளமை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அநுர நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார். அவ்வுரையிலேயே அடுத்த கட்ட நகர்வுகள் பற்றி விளக்கமளிக்கவுள்ளார்.
அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ள ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா, இந்த வெற்றியை அனைத்து இலங்கையர்களும் அமைதியான முறையில் கொண்டாடவேண்டும் என அழைப்பு விடுத்தார்.
அநுர தலைமையிலான புதிய அரசாங்கத்தில் பிரதமராக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகின்றது.
நாடாளுமன்றம் எதிர்வரும் 8 ஆம் திகதி கூடவுள்ளது. எனினும், அதற்கு முன்னதாக நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனவும் அறியமுடிகின்றது. (அ-ஒ-44)

### நாடாளுமன்றத்...

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். எனினும் நாடாளுமன்றத் தேர்தல் எப்போது இடம்பெறவேண்டும் என்பது போன்ற விடயங்களை அவர் நேற்று வெளியிடவில்லை. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ். தேர்தல் மாவட்டத்தில் 25 ,353 வாக்குகள் நிராகரிப்பு



கொழும்பு, செப். 23

யாழ். தேர்தல் மாவட்டத்தில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளாக 3 இலட்சத்து 97 ஆயிரத்து 41வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் 25 ஆயிரத்து 353 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். பதில் மாவட்டச் செயலரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 688 செல்லுபடியான வாக்குகள் அளிக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸ 1இலட்சத்து 21 ஆயிரத்து 177 வாக்குகளும், பா. அரியநேந்திரன் 1 இலட்சத்து 16 ஆயிரத்து 688 வாக்குகளும், ரணில் விக்கிரமசிங்க 84 ஆயிரத்து 558 வாக்குகளும், அநுரகுமார திஸாநாயக்க 27 ஆயிரத்து 086 வாக்குகளையும் பெற்றுள்ளனர். ஏனைய வேட்பாளர்கள் மொத்தமாக 22 ஆயிரத்து 179 வாக்குகளையும் பெற்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-20)

தியாகதீபம் நினைவாக

# நல்லூரில் இன்று குருதிக் கொடை



கொழும்பு, செப். 23

தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நாளை முன்னிட்டு அவரின் நினைவாகத் தியாக தீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியடியில் நடைபெறவிருந்த மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு ஊரடங்குச் சட்டம் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல்12 மணி வரை மாபெரும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)



# ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, செப். 23

தேர்தல் முடிவுகளையொட்டி நேற்று முன்தினம் நாளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் 10 மணி முதல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அஞ்சல் தினத்தையொட்டி மாணவரிடையே போட்டி

யாழ்ப்பாணம், செப்.23

ஒக்ரோபர் 9ஆம் திகதி கடைப்பிடிக்கப்படவுள்ள 150ஆவது உலக அஞ்சல்தினத்தைமுன்னிட்டு மாணவர்களிடையே 'கடிதம் எழுதுவோம் உலகைக் காண்போம்' எனும் தொனிப்பொருளில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தால் கடிதம் எழுதுதல் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டியில் பங்குபற்றுவதற்கான நிபந்தனைகளாக, தீவில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இப்போட்டியில் பங்கேற்கும் வகையில் 9 மற்றும் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக இப்போட்டி மூன்று மொழிகளிலும் நடத்தப்படும், ஆக்கமானது ஒரு கடிதத்தின் வடிவத்தில் அமைந்திருக்கவேண்டும், மேலும் கடிதத்தின் கூறுகளை அது கொண்டிருக்க வேண்டும்.

கடிதத்தின் தொனிப்பொருள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் கடிதம் 800 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும், ஒரு போட்டியாளர் இப்போட்டிக்கு எத்தனை கடிதங்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

ஆனால் ஒவ்வொரு கடிதமும் பதிவுத் தபால் மூலம் தனித் தனியாக அனுப்பப்படவேண்டும். இந்தக் கடிதத்தை ஃபூல்ஸ்கேப் தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும், இணைக்கப்பட்டுள்ள நுழைவுப் படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் சொந்த வடிவமைப்பு எனக் கையொப்பமிட்டு, வகுப்பு ஆசிரியர் மற்றும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்ட கடிதத்துடன் சமர்ப்பித்தல்வேண்டும். போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் கடிதங்கள் 2024 செப்ரெம்பர் 22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பிரதம போதனாசிரியர், கொழும்பு அஞ்சல் பயிற்சி நிறுவகம், வெள்ளவத்தை கொழும்பு 06' என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

ஆக்கம் உள்ளடக்கப்படும் ஒவ்வொரு கடித உறையின் முகப்பக்க இடதுபுற மேல் மூலையில் ' கடிதம் எழுதும் போட்டி 2024' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

போட்டியில் முதலிடத்தை பெறுபவருக்கு ரூபா. 25 ஆயிரம் பணப்பரிசிலும், இரண்டாமிடத்தை பெறுபவருக்கு ரூபா 15 ஆயிரம் பணப்பரிசிலும், மூன்றாமிடத்தை பெறுபவருக்கு ரூபா பத்தாயிரம் பணப்பரிசிலும், பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-45)



# தினம் தெரியுமோ?

அருண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்டமாதிரி இருக்கிற எங்கடை கண்கெட்ட சனங்கள் எல்லாருக்கும் அவசரமா ஒரு இலவச கண்பரிசோதனை முகாம் ஒண்டு வைக்க வேணும். இல்லாட்டி ஒவ்வொருமுறை எலக்சனிலையும் உந்தச் சனங்கள் தமிழரின்ர மானத்தையும், எங்கட புத்திசாலித்தனம் பற்றி வெளியாக்கள் வைச்சிருக்கிற ஆச்சரியத்தையும் குழிதோண்டிக் குப்பையில போட்டிடுவினம்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில போட்டியிட்டவர் எதிர்க்கட்சிகளின்ர பொது வேட்பாளரா நிண்டதால அவர் அந்தமுறை அன்னம் சின்னத்தில தான் எலக்சன் கேட்டவர். அப்ப கூட்டமைப்பும் பலமாயிருந்த நேரம். கூட்டமைப்பு என்ன சொல்லுதோ அதை அரசாங்கமும் கேட்ட நேரம். தான் வெண்டதே வடக்கு-கிழக்கில உள்ள தமிழரின்ர சப்போர்ட்டாலதான் எண்டு எலக்சன் முடிஞ்சபிறகு மைத்திரியே கன இடங்களில சொல்லியிருக்கிறார். இப்பிடி ஈழத்தில உள்ள எல்லாத் தொகுதிகளிலையும் உள்ள சனங்களும் மைத்திரியின்ர அன்னச் சின்னத்துக்கு 'வோட்' போடேக்க, இந்தக் கண்பார்வை சரியில்லாத எங்கட ஆக்கள் அன்னமெண்டு நினைச்சு கழுகுச் சின்னத்துக்கு பரவலாக வாக்குப் போட்ட கதை வெளியில வர, உலகமே எங்களைப் பார்த்துச் சிரிச்சது.

சரி, ஒருக்காத்தான் இப்பிடிப் பார்வைக்கோளாறால மிஸ்டேக் வருமெண்டு மனதை ஆத்திக் கொண்டால், பழைய குருடி கதவைத்திறந்த மாதிரி, திரும்பவும் அதே பார்வைக்கோளாறால அதேமாதிரிப் பிழை ஒண்டைச் செய்து, தமிழர் எண்டாலே கண்ணை மூடிக்கொண்டு வாக்கைப் போடுற ஆக்கள் எண்டமாதிரி எல்லாரையும் நினைக்க வைச்சிட்டினம். வேற ஒண்டுமில்லை. உவர் சஜித் ரெலிபோன் சின்னத்திலதானே போட்டி போட்டவர். அதால வாக்குப் போடுற ஆக்களிட்ட வாக்களிப்பு நிலையத்துக்குள்ள போய் ரெலிபோனுக்கு வாக்கைப் போட்டிட்டு வாங்கோ எண்டு வெளியில நிண்டவை சொல்லி அனுப்பியிருக்கினம். சரியெண்டு தலையாட்டிப் போட்டு உள்ளுக்க போனவை பழைய கால ரெலிபோன் டிசைனில இருந்த சின்னத்தை ரெலிபோனாவே மதிக்கேலை. ஆனால் அதே வாக்குச் சீட்டில இருந்த கல்குலேட்டர் கிட்டத்தட்ட செல்போன்ர சாயலில இருந்ததால, உதுதான் ரெலிபோன் சின்னமாக்கும் எண்டு நினைச்சு ஏறியிருந்து புள்ளடி போட்டு, மொத்த வித்தையையும் காட்டியிருக்கினம்.

பிறகென்ன, அந்தக் கல்குலேட்டர் சின்னத்தில போட்டிபோட்ட கே.கே.பியதாச எண்ட புண்ணியவானுக்கு நினைக்காத அளவுக்கு அமோக வாக்குகள் விழுந்திருக்கு. இப்பிடி ஆருமே கணக்கில எடுக்காத கல்குலேட்டருக்கு தமிழ்ச் சனம் செய்த கௌரவத்துக்காக, அவைக்கு ஒரு கோயிலையே கட்டிக் கும்பிடப்போறாராம் கே.கே. பியதாச. இப்ப பிரச்சினை என்னெண்டா இனி நாலைஞ்சு மாதத்தில வரப்போற பார்லிமெண்ட் எலக்சனில எங்கடை ஆக்கள் என்ன சின்னத்துக்கு மாறி வாக்களிக்கப்போயினமோ தெரியேலையே.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசை விருந்து நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.23
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் இளம் கலைஞர் சாகித்தியனின் தெய்வீக இசை விருந்து நிகழ்வு அணிசெய் கலைஞர்களுடன் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச-45-66)



# விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப்.23
யாழ்.நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்குப் பாடசாலை வரவு ஒழுங்கு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் நடத்தைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நல்லூர் பிரதேச செயலாளரின் வழிகாட்டலில் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தரால் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-45-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்ல படி முடியும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** இன்று உற்சாகமாகக் காணப்படுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடுகள் வீட்டில் கலகலப்பான சூழ்நிலையை ஏற்படுத்தும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும்.

**சிம்மம்:** காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்து விடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தெய்வப் பிரார்த்தனைகளை நிறை வேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஒத்துழைப்பு தருவார். நண்பர்கள் மூலம் எதிர்பாராத ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம் :** . வியாபாரத்தில் லாபம் இருந்தாலும், பணியாளர்களால் செலவுகளும் ஏற்படக் கூடும். முருகப்பெருமானை வழிபட நன்மை கள் அதிகரிக்கும். கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**மகரம்:** எதிர்பாராத அதிஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. மாலையில் சகோதரர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்யவேண்டி வரும். குடும்பத்துடன் தெய்வப் பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படக் கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக் கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.



# குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.23
ஈழத்துச் சித்தர் நல்லூர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகிலுள்ள செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் நல்லூர் சைவப்பிரகாசப் பேரவையின் செயலாளர் வே.சிவகுருநாதன் 'கந்தபுராணத்தின் மகிமை' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார். (ச-45-66)



# மரவள்ளிப் பயிர்களில் ஒருவித நோய்த்தாக்கம்

யாழ்ப்பாணம், செப். 23
யாழ்.குடாநாட்டில் மரவள்ளிப் பயிர்கள் ஒருவித நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.
அநேகமான இடங்களில் மரவள்ளிப் பயிர்களில் ஏற்பட்ட நோய்த்தாக்கத்தால் மரவள்ளிக் கிழங்கு விளைச்சல் குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். இதனால் மரவள்ளிக்கிழங்கின் விலையும் சடுதியாக உயர்ந்துள்ளது. ஒருகிலோ மரவள்ளிக்கிழங்கு தற்போது 250 ரூபாவாக உயர்ந்துள்ளது. (ச-17)

# அம்புலன்ஸூம் இல்லை மருத்துவர்களும் இல்லை

## அம்பன் மருத்துவமனையில் நோயாளர்கள் அவதி

யாழ்ப்பாணம், செப்.23
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் பிரதேச மருத்துவமனையில் அம்புலன்ஸ் இன்மையால் நோயாளர்கள் அவதிக்குள்ளாகின்றனர். அத்துடன் மருத்துவர்களும் இரவு வேளைகளில் இன்மை காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
அம்பன் பிரதேச மருத்துவமனையானது பிரதேச மருத்துவமனை தரம் இரண்டு ஆகும். இங்கு இரண்டு மருத்துவர்கள் பகலில் கடமையில் உள்ளனர். ஆனால் இரவு வேளைகளில் மருத்துவர்கள் எவரும் கடமையாற்றுவதில்லை.
இரவு வேளைகளில் மருத்துவமனைக்கு அவசர நோயாளர்கள் செல்லும் போது அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு அனுப்புவது வழமையாகும்.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அம்பன் பிரதேச மருத்துவமனைக்கு நாகர்கோவில் பகுதியிலிருந்து வலிப்பு ஏற்பட்டு சிறுமி ஒருவரை அவரது பெற்றோர் இரவு 8:30 மணியளவில் கொண்டு சென்றுள்ளனர். ஆனால் அம்பன் பிரதேச மருத்துவமனையினுடைய அம்புலன்ஸ் அங்கு இல்லை. அது பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
பின்னர் மருத்துவமனை ஊழியர்கள் மருதங்கேணி பிரதேச மருத்துவமனை அம்புலன்ஸ் ஊடாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு சிறுமியை அனுப்பியுள்ளனர். இதனால் சுமார் 50 நிமிடங்கள் வரை தாமதம் ஏற்பட்டுள்ளது.
அம்பன் மருத்துவமனையில் இரவுக் கடமைக்கு மருத்துவரும் இல்லாத நிலையில், தற்போது அம்புலன்ஸூம் இல்லை. இதனால் அவசர நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இரும்பு ஆளுமையாக இயங்க அநுரவுக்கு வாழ்த்துகள்


ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இன்று பதவியேற்கவுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க. இந்தக் கதிரைக்கான அநுரவின் பயணம் மிகப்பெரியது. அது அவ்வளவு இலகுவில் வார்த்தைகளால் அளந்தெழுதிவிட முடியாதது. ஒவ்வொரு நாடும் அபிவிருத்தியிலும், ஜனநாயகத்திலும், பொருளாதாரத்திலும் மீண்டெழுவதற்கு ஒரு தலைமைத்துவம் பெரும் திருப்பமாக அமையும். அந்தத் திருப்பமாகத்தான் இலங்கையர்கள் அநுரவை நோக்கினார்கள். ஆதலால்தான் பணபலம் - படைபலம் - அதிகாரபலம் இல்லாமல் மக்கள் பலத்தால் இன்று அதிகாரக் கதிரையில் அமரவிருக்கின்றார் அநுர. 'நீரைத் தேடும் வேரைப்போல' இந்த வெற்றியைக் கண்டடைந்திருக்கின்றார் அவர்.

இலங்கையில் ஒவ்வொரு புதிய முகங்களும் ஆட்சிக்கு வரும்போது, அந்தப் புதிய முகங்களை 'மீட்பின் தூதர்களாகத்தான்' இலங்கையர்கள் எண்ணிக்கொள்வர். தமிழர்கள் இந்த விடயத்தில் விதிவிலக்காக இருந்தாலும், ஒட்டுமொத்த சிங்கள மக்களின் மனோநிலை அதுவே. ஆனால், அதிகாரத்தை அலங்கரித்த வெகுசில நாள்களிலேயே, அந்த மீட்பின் தூதுவர்கள் தம் கோரப்பற்களைக் காட்டத் தொடங்கிவிடுவார்கள். எண்ணற்ற உதாரணங்கள் இதற்காகக் கொட்டிக்கிடக்கின்றன. அத்தகைய வரிசையில் அநுர இடம்பெற்றுவிடக்கூடாது என்பதுதான் இலங்கையர்களின் இப்போதைய பெருவிருப்பம்.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கையை, தற்போது உயிர்ப்புடன் வைத்திருப்பது சர்வதேசநாணய நிதியத்தின் கடனுதவிகளே. அநுர ஆட்சிக்கு வந்தால், மீண்டும் வரிசையுகம் தோற்றம்பெறும், அவர் நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவார் என்ற விமர்சனங்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டன. இதையெல்லாம் தாண்டி அநுரவை மக்கள் தெரிவுசெய்திருக்கின்றார்கள் என்றால் அங்கே இலங்கையர்கள் தம்மைத் தாமே பணயம் வைத்திருக்கின்றார்கள் என்றுதான் அர்த்தம். இலங்கையர்களின் இந்தக் கத்திமுனை நடைக்குக் காரணம், ஊழல் மற்றும் போதைப்பொருள் என்பவற்றின் பிடியிலிருந்து அநுர நாட்டை மீட்பார் என்பதில் கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கைதான். அந்த நம்பிக்கைதான் சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இன்று புதியதொரு அத்தியாயம் எழுதப்படக் காரணமாகியிருக்கின்றது. ஆதலால், தன் மீதான நம்பிக்கைக்கு அநுர எந்த வஞ்சகமும் செய்துவிடக்கூடாது.

இதேவேளை, தமிழர் பகுதிகளிலும் அநுரவுக்கு அலையொன்று ஏற்பட்டிருந்தாலும், 'ஆஹா' என்ற வரவேற்புக் கிட்டவில்லை. மூன்றாம், நான்காம் இடங்களைத்தான் தமிழர் தாயகத்தின் தொகுதிகளில் அவர் பெற்றிருக்கின்றார். வழக்கமான தேர்தல் வாக்களிப்புகளின்போது, தமிழர் தேசத்தின் மக்கள் தீர்ப்பு பிறிதொரு வர்ணத்தில் தனித்துத் தெரியும் நிலை இந்தத் தேர்தலிலும் எதிரொலிக்கவே செய்கின்றது. அதை அநுரவால்கூட மறுதலித்துவிட முடியாது. எனவே, தமிழர்கள் காட்டிய இந்தத் தயக்கத்தின் பின்னணிய்ய அநுர நாடிபிடித்துப் பார்க்கவேண்டும். அதுதான் உண்மையான மாற்றத்துக்கான போர். இலங்கைத் தீவில் வெறுமனே ஊழலுக்கு எதிரான போரை மாற்றத்துக்கு எதிரான போராகக் கருதிக்கொள்ளமுடியாது. எனவே, 'ஜனாதிபதி அநுர' இப்போது இருகுழல் துப்பாக்கி. இரு விடயங்களிலும் அவர் கொண்டிருக்கக்கூடிய மாற்றம்தான் நாட்டின் மீட்சி.

இலங்கையை மீட்சியை நோக்கி அழைத்துச் செல்வதற்கு அநுர மேற்கொள்ளப்போகும் பயணத்தில் சந்திக்கப்போகும் சவால்கள் மிகப்பெரியன. இதை அநுர அறிவாரோ இல்லையோ தமிழர்கள் நன்றாக அறிவார்கள். அந்தச் சவால்களையெல்லாம் தாண்டி 'சிங்கப்பூருக்கு வாய்த்த லீ குவான் யூவாக' அநுர பரிணமிக்கவேண்டும். இது கொஞ்சம் பெரிய வார்த்தைதான். ஆனால், அநுர அதற்குத் தகுதியானவர். அவருக்கு வாழ்த்துகள்.



# தமிழர்களின் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது

## செல்வம் எம்.பி. மகிழ்ச்சி

**கொழும்பு, செப். 23**

**அரியநேந்திரன் பெற்ற வாக்குகள் தமிழர்களின் ஒற்றுமையை பறைசாற்றும் வெற்றி என்பதோடு நாடாளுமன்றத் தேர்தலிலும் பொதுக் கட்டமைப்பினூடாக களமிறங்குவோம் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் திரட்சியையும் ஓர் அணியில் தமிழ் மக்கள் திரள வேண்டும் என்கின்ற ஒரு நற்செய்தியையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு பலப்பரீட்சை எமது தேசத்தில் இடம்பெற்றது.

இதற்கு தமிழ் மக்கள் தங்களது ஆதரவை தெரிவித்திருக்கின்றார்கள். அவருக்குக் கிடைத்த ஒரு இலட்சத்து 80 ஆயிரம் வாக்குகள் என்பது வெற்றியின் முதற்படியாகவே கருதுகிறோம்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இந்தப் பொதுக் கட்டமைப்பின் ஊடாகவே நாம் தேர்தலை சந்திப்போம். இது மக்களின் ஒரு திரட்சியான வெளிப்பாடாக இருக்கும் என்பதோடு ஒற்றுமையை விரும்பாத கட்சிகளை மக்கள் புறக்கணிப்பார்கள் என்பதை நாடாளுமன்றத் தேர்தல் வெளிப்படுத்தும் எனவும் தெரிவித்தார். (ச)

# இளம்பெண் கொடூரக்கொலை

கொழும்பு, செப். 23

மிரிஹான பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெங்கிரிவத்த, சந்தானம் பிட்டிய பிரதேசத்தில் பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் தனது வீட்டில் தங்கியிருந்த நிலையில் கத்தியால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்த வீட்டின் சாரதியாக பணியாற்றியவரே கொலையை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேக நபரை கைது செய்வதற்காக மிரிஹான பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)



# ஜெயசிறி மறைவு

கொழும்பு, செப். 23

மூத்த இலங்கை நடிகர், திரைக்கதை எழுத்தாளர் மற்றும் பாடலாசிரியர் டபிள்யூ ஜெயசிறி தனது 77 ஆவது வயதில் நேற்றுக் காலமானார். (ச)

# ஊழல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீர்மானம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற ஊழல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் 36 பில்லியன் ஊழல் இடம்பெற்றுள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை கூறுகிறது. இந்த மோசடி தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவேண்டுமென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ஜனக ரத்நாயக்க கோரிக்கை விடுத்திருந்தார்.

ஜனக ரத்நாயக்கவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது. (ச-45-6)

## நாளை

24.09.2024

செவ்வாய்க்கிழமை - புரட்டாதி - 08

சுபநேரம் : 10.32- 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

## நாளொரு நல்வார்த்தை

அறிவு கொஞ்சமாக இருந்தாலும் தன்னம்பிக்கையுடன் கூடிய உழைப்பு இருந்தால் எதையும் சாதிக்கலாம்.

- தோமஸ் அல்வா எடிசன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரணி, நடைபவனி ஒரு வாரத்துக்குத் தடை

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவிப்பு

**கொழும்பு, செப். 23**

**ஒரு வார காலத்துக்கு வாகனங்களினூடாகவோ அல்லது நடைப்பய ணமாகவோ பேரணி செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார்.**

இதற்கமைய ஜனாதிபதித் தேர்தல் இறுதி முடிவுகள் வெளியாகும் வரையிலான காலப்பகுதி மற்றும் அதன் பின்னரான காலப்பகுதி உள்ளடங்க ளாக ஒரு வாரகாலத்துக்கு இவ்வாறு பேரணி செல்ல தடைவிதிக்கப்பட்டுள் ளது. தேர்தலுக்குப் பின்னரும் நாட்டில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். எனவே, சட்ட ஒழுங்கை பாதுகாக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# விதைகளே பேராயுதம்!

## அநுர பதிவு

கொழும்பு, செப். 23

வெளியான தபால்மூல வாக்குகளுக்கான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் முன்னிலை வகிக்கும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திஸாநாயக்க, முன்னதாக தனது முகநூல் பக்கத்தில் பதிவொன்றினை பதிவிட்டுள்ளார்.


அந்தப் பதிவில், "அவர்கள் எங்களை புதைக்க முயற்சித்தார்கள், நாங்கள் விதைகள் என்று அவர்களுக்கு தெரியாது." என பதிவிட்டுள்ளார்.

இந்த முகநூல் பதிவை அநுரகுமாரவின் ஆதரவாளர்கள், தற்போது அதிகம் பகிர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



# முதல் அமைதியான சிறந்த தேர்தல் இது!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 23

நாட்டின் அண்மைக்கால வரலாற்றில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்ற தேர்தல் இதுவாகும் என பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்

அத்துடன் இம்முறை ஒரு வன்முறைச் சம்பவம் மாத்திரம் பதிவாகியுள்ளது.

இதேவேளை இரண்டு வாக்குச்சீட்டுக் கிழிப்பு சம்பவங்களும், வாக்குச்சீட்டை காணொலி பதிவு செய்த இரண்டு சம்பவங்களும் பதிவாகியுள்ளது.

இதேவேளை, தேர்தல் வரலாற்றில் அமைதியான முறையில் நடைபெற்ற சிறந்த தேர்தல் இதுவென நம்புவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் சிறு சம்பவங்கள் பதிவாகி 10 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் டிஐஜி சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்துள்ளார். (ச)



# விதிமீறிய பதிவுகள் பாய்கிறது சட்டம்

கொழும்பு, செப். 23

ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தை மீறி சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் அனைவரும் நீதிமன்றத்தில் பதில் அளிக்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுமார் ஆயிரம் சமூக ஊடகப் பதிவுகளில் தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளன.

அமைதியான நேரத்தில் சமூக ஊடகங்கள் மூலம் தேர்தல் விதிமுறைகளை மீறுவது தொடர்பாக கண்காணிப்பு நிறுவனங்களிடமிருந்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவது போதுமானதாக இல்லாவிட்டாலும் இறுதி முடிவாக இவ்வாறானவர்கள் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு பாரபட்சம் விளைவிக்கும் சட்டவிரோத விளம்பரத் திட்டங்களை நீக்குமாறு சமூக ஊடக நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது என்றும் தேர்தல் ஆணையத்தின் ஆணையர் எம்.ஏ. பி.சி. பெரேரா தெரிவித்துள்ளார். (ச)

# புதிய ஜனாதிபதிக்கு முழு ஆதரவு

கொழும்பு, செப். 23

நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டாலும் அவருக்கு ஆதரவளிக்கத் தயாராகவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் வாக்களிப்பை மேற்கொண்ட பின்னரே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நான் தற்போதைக்கு அரசியலை விட்டு ஒதுங்கவில்லை. ஆனால் எதிர்வரும் காலங்களில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் அல்லது நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட மாட்டேன்.

புதிய ஜனாதிபதிக்கு எனது பூரண ஒத்துழைப்பை வழங்குவேன். ஆனாலும் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகின்றவர் எதிர்வரும் காலங்களில் நாடாளுமன்றம், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றுக்கான தேர்தல்களை நடத்தவேண்டும். அதற்கான நிதியைத் தேடிக்கொள்ள வேண்டும். அவ்வாறான நிலையில் புதிய ஜனாதிபதி பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-44)

# ஊரடங்கு அநாவசியம்

## ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 23

அநாவசியமான முறையில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பிட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுள்ள நிலையில் தேவையின்றி ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாக மூன்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எவ்வித வன்முறைகளும் இடம்பெறாத நிலையில் தேவையின்றி ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி கலகத்தை ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

அதேவேளை தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ளாது இவ்வாறு ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை கலகத்தை விளைவிப்பதற்கான முயற்சி எனத் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் ஆளுநர் மஹிந்த தேசப்பிரிய குற்றஞ்சுமத்தியுள்ளார். (ச)

# சில பகுதிகளிலேயே தேர்தல் விதிமீறல்கள்

கொழும்பு, செப். 23

இம்முறை ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டின் சில பகுதிகளில் இருந்து தேர்தல் சட்டங்களை மீறும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கேகாலை, தெவிநுவர, காலியின் அதுலுகொட, கம்பஹா, நாத்தாண்டிய, குளியாப்பிட்டிய, மாத்தறை, வெலிகம, பெந்தர எல்பிட்டிய, பலாங்கொடை, கொலன்னாவ, ரத்கம, கிரிபத்கொட, கேகாலை, யட்டியந்தோட்டை போன்ற இடங்களில் பல தேர்தல் சட்டமீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகப் பவ்ரல் தெரிவித்துள்ளது.


சட்டவிரோத தேர்தல் பிரசாரம் முதல் வாக்காளர்களை அழைத்துச்செல்வது போன்ற சம்பவங்கள் இதில் அடங்குகின்றன.

மாத்தளை நாவுல, மெத்தேகந்த, பண்டாரவளை, மாத்தறை பெரகம, பத்தஹேவாஹட்ட மவுசாவ ஆகிய இடங்களில் ஐந்து வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனினும் வாக்குப்பதிவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்கள் அல்லது சூழ்நிலைகள் தேர்தல் நாளில் ஏற்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 08 . 1942

இறப்பு
22 . 09 . 2024

### திருமதி தம்பித்துரை இராசாத்தி

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பித்துரை இராசாத்தி நேற்று (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராசா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிராசா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பித்துரையின் அன்பு மனைவியும், ஜெயராஜி, ராஜாஜி (ராஜ்ீ-ஜேர்மன்), சிவராஜி, யுகராஜி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராசகுலம், சர்மிளா (ஜேர்மன்), ஸ்ரீஸ்காந்தன் (சுரேஸ் லைற்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், இந்து, இலக்கியா, டிலக்ஷனா, தரணிகா, பிரணவன், கஜனி, கோகுலன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருநெல்வேலியில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (23.09.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

118, சிவன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P 077 368 7413

(CS 1423) A-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
23 . 02 . 1946

இறப்பு
04 . 10 . 2023

### அமரர் கந்தசாமி கிருஷ்ணமூர்த்தி

ஆண்டு ஒன்று ஆனது ஐயா மாநிலத்தில் நீபிரிந்து!
தீராத துயரத்தில் தேம்புகின்றோம் நாம் இங்கு!
உறவுகளைத் தவிக்கவிட்டு இமைகளை மூடிவிட்டாய்!
எம்மையெல்லாம் அழவிட்டு இறைவனை நாடிவிட்டாய்!
உன்னை எண்ணித் தினம் தினம் மனம் வெதும்புகின்றோம்!
நீ மறைந்த நாள் முதலாய் நிம்மதி எமக்கு இல்லை ஐயா!
நினைவிழந்து செயலிழந்து நிர்க்கதியாய் நிற்கிறோம் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

(CS 1421) A-1

### அநுரவுக்கு...

லுள்ள வெளிநாட்டு தூதுவர்களும், இராஜதந்திரிகளும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். சமூகவலைத்தளங்கள் ஊடாகவும், தொலைபேசி ஊடாக நேரிலுமே இவ்வாறு வாழ்த்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவரும் அநுர குமார திஸாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்து, நேற்று நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கினார்.

அத்துடன் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் புதுடில்லி வருமாறு அழைப்பு விடுத்துள்ளார் என தெரியவருகின்றது.

இந்திய மத்திய அரசின் ஆலோசனையின் பிரகாரமே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன்படி அநுர ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதலாவது வெளிநாட்டு பயணமாக டில்லிப் பயணம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சீனத் தூதுவரும் அநுரவுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். (அ-ஓ-44)

## மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 12 . 1941

மறைவு
20 . 09 . 2024

### இந்திராதேவி கனகலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியை - பாலையூற்று மகா வித்தியாலயம் - திருகோணமலை, காசிப்பிள்ளை மகா வித்தியாலயம் - நல்லூர், ஞானோதயா மகா வித்தியாலயம் - கல்வியங்காடு, பளை மகா வித்தியாலயம் - பளை)

யாழ்ப்பாணம் நல்லூர் 56, அரசவீதியை, வதிவிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி இந்திராதேவி கனகலிங்கம் அவர்கள் தனது 82வது வயதில் (20-09-2024) அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லூர் பண்டிதர் சு. இராசையா - பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற பொன்னுச்சாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும்,, காலஞ்சென்ற Dr. கனகலிங்கத்தின் அன்பு மனைவியும், ராஜ்மோகன் (அவுஸ்திரேலியா), ஜெகன்மோகன் (கனடா), Dr. சந்திரமோகன் (கண்டி), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும்,, ஸ்ரீஷண்முகராஜா (மட்டக்களப்பு), கலாநிதி ஸ்ரீஇரவீந்திரராஜா (சிட்னி), ஸ்ரீதரன் (பிரிஸ்பேன்), ஸ்ரீபதி (சிட்னி), ஸ்ரீசிவகுமாரன் (கனடா), ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீஇந்திரன் (அமெரிக்கா), காஞ்சனா (கனடா), ஸ்ரீரங்கன் (சிட்னி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மேகலா, வசுந்தரா, Dr. சஞ்சீவினி, லோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், விஜய், ஹரணி, மீரா, ஸ்ரீராம், அஸ்வின், சந்தியா, அர்ஜுன், சஜீவன், கவிஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும்,, காலஞ்சென்றவர்களாகிய கனகசபாபதி, திருமதி மாணிக்கம் இராசதுரை, திருமதி சரஸ்வதி நடராஜா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2024) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் 56, அரசவீதி, நல்லூரில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

56, அரசடி வீதி,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்
071 813 3423, 021 333 7427

(CS/14422) J-1

## மரண அறிவித்தல்



மலர்வு
03 . 11 . 1939

உதிர்வு
21 . 09 . 2024

### திருமதி கனகம்மா இராமநாதன்

யாழ். சிறுப்பிட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா இராமநாதன் 21.09.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு விநாசித்தம்பி அருணாசலம்-திருமதி அருணாசலம் மாசிலாமணி தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்ற பொன்னம்பலம் இராமநாதன் (விதானையார்) அவர்களின் அன்பு மனைவியும் தயாபரன், மீனலோஜினி, கௌசலா (சாந்தி), காலஞ்சென்ற கயமுகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சக்திவேலன் (பாபு), நளாயினி ஆகியோரின் அன்பு மாமியாரும் லதாங்கி, கம்சத்வனி, ஹரிபவன், ஹரன்னியா, விதுரன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தர்மலிங்கம், காலம்சென்றவர்களான மகாதேவன், கமலாதேவி ஆகியோரின் பாசமுள்ள சகோதரியும் மங்கையர்க்கரசி, காலம்சென்ற கனகசபையின் அன்பு மைத்துணியும் ஆவார்.

இறுதி கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் நாளை (24.09.2024) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்கு காளையன் மொண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தயாபரன் - 00 44 791 476 5111
பாபு - 00 479 056 8597
கௌசலா - 00 479 798 1397
தர்மலிங்கம் - 00 94 70 307 1717

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 42879) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

1978 இல் பிறந்த (V) கேட்டை நட்சத்திரம் 3ம் பாதம், 11ல் சூரியன் செவ்வாய் உள்ள திருமணமாகாத மணமகனுக்கு, திருமணமாகாத மணமகள் தேவை.

075 617 8008

## விதைநெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைத் தரக்கூடிய மூன்று மாத B.G.312 மூன்றரை மாத B.G.34.6 நான்கு மாத B.G. 406 இன விதை நெல் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 659 2044


## கண்ணீர் அஞ்சலி



அருள்மிகு உரும்பிராய்
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்
பரிபால்ன சபையின் செயற்றிறன் மிக்க உறுப்பினரான திரு.சிவஞானம் சிவராம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி
**மங்கையர்கரசி சிவஞானம்**

அவர்கள் இவ்வுலகை நீத்தார் என்னும் செய்தியறிந்து துயரடைவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம். மேலும் அவரது ஆத்மா அம்பாள் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபை
உரும்பிராய்
பர்வதவர்த்தனி அம்மன் கோயில்

(CR 43270) A-1

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் நதியாவின்
பாசமிகு தாயார்

**திருமதி தவமணி தர்மலிங்கம்**

அவர்கள் 21.09. 2024 இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.



மலர்வு 27.06.1959 உதிர்வு 21.09.2024

ஊழியர் நலன்புரி சங்கம்
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பளை

# கண்ணீர் அஞ்சலி



யா/ உரு. சை. வித்யாசாலை, பழைய. மா. சங்க செயலலாளர் திரு. ந. கணேசலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும், பழைய மாணவர் சங்க உறுப்பினர் திரு. சிவஞானம் சிவராம் அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் மங்கையர்க்கரசி சிவஞானம்**

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்புடன் அவரது ஆத்மா சாந்தியடைய உரும்பிராய் ஒடையம் பதி கற்பக விநாயகரை பிரார்த்திக் கின்றோம்.

யா/ உரு. சை. வித்யாசாலை
பழைய மாணவர் சங்கம்

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 07 • 09 • 1964



மறைவு 15 • 10 • 2022

**அமரர் செந்தில்வேல் இரவீந்திரன்**
(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)

23.09.2024
திதி: ஷஷ்டி

அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஓராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இல.18/6, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/1414) J-1


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

077 138 7596, 071 999 9306

(CS/56272) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 10 • 05 • 1936



மறைவு 22 • 09 • 2024

**திருமதி. சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி)**

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், செட்டிவளவு ஒழுங்கை இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி) அவர்கள் நேற்று (22.09.2024) ஞாயிற்றுக் கிழமை இறைவனின் திருவடி எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

இணுவில் மேற்கு,
இணுவில்.

சு.விக்கினேஷ்வரராஜா (மகன்) - 077 553 9964
ம.சிவகுமார் (மருமகன் - குமார் பந்தல்) - 077 352 7715
ம.ஜெயக்குமார் (மருமகன்) - 077 374 7342

(CS/28987) J-1

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 • 09 • 1927



உதிர்வு 12 • 10 • 2006

அமரர் **இராசரத்தினம் இரத்தினவேல் (J.P)**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)

பதினெட்டு ஆண்டுகள் சென்ற போதிலும்
மனம் மீளவில்லை நினைவிலிருந்து
அவனிதனில் நாம் உள்ளவரை
அழியாது உங்கள் நினைவுகள்
வந்தனை செய்து நிற்போம்
வானுலகில் நீங்கள் அமைதிகொள்ள!

[illegible] வீதி, உரும்பிராய். குடும்பத்தினர்.

மூவின...

அமைத்துக்கொள்வதற்காக இந்த மண்ணுக்கு புத்தம்புதிய ஆரம்பமொன்று அவசியமாகும். சிங்கள, தமிழ், முஸ்லிம்களாகிய எம்மனைவரதும் ஒன்றுசேர்ந்த வலிமை ஆரம்பிக்கின்ற யுகத்தின் அடிக்கல்லாக அமையும். அதன்மீதுதான் புதிய மறுமலர்ச்சி யுகம் கட்டியெழுப்பப்படும். வாருங்கள் நாங்கள் அதற்காக கைகோர்த்துக் கொள்வோம் என புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 9ஆவது ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார, நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல நூற்றாண்டு காலமாக நாங்கள் கண்ட கனவே இறுதியில் நனவாகிக்கொண்டிருக்கிறது. இந்த கனவை நனவாக்குவதற்காக பல சிரமங்களுக்கு மத்தியில் இலட்சக்கணக்கான நீங்கள் அனைவரும் கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சி பலனளித்துள்ளது. அதற்காக என்னால் உங்களுக்கு நன்றிகூற முடியாது. அதற்கான காரணம் அது என்னுடையதல்ல, எமது கூட்டு முயற்சியின் பெறுபேறாகும். இது எம்மனைவரதும் வெற்றியாகும். நாங்கள் மாத்திரமல்ல இந்த வெற்றிக்காக பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் தமது குருதி, கண்ணீர், வியர்வையை மாத்திரமன்றி உயிர்களைக்கூட தியாகம் செய்துள்ளார்கள். எமக்கு முந்திய தலைமுறையினர் எம்மிடம் கையளித்த குறுந்தடியில் வீணாகிப்போய் விடாத அவர்களின் முடிவிலா அர்ப்பணிப்பே பொதிந்துள்ளது.

அதன் சுமையை நாங்கள் நன்றாகவே அறிவோம். எதிர்பார்ப்புகள் நிறைந்த உங்களின் இலட்சக்கணக்கான விழிகள் எமக்கு தெம்பூட்டுகின்றன. இலங்கையின் வரலாற்றை புதிதாக எழுதவேண்டுமென எமக்கு அழைப்பு விடுக்கின்றன - என்றுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
15 . 06 . 1945



மறைவு
27 . 09 . 2021

## அமரர் திரு. சிவகுரு அரியரத்தினம்

(சாவகச்சேரி, பிரபல வெற்றிலைக் கடை அரியம்)

திதி: புரட்டாதி திங்கள் தேய்பிறை ஷஷ்டி

தரணியிலே தலை நிமிர்ந்து நாம் வாழ
தன்னிகர் இல்லாத் தந்தையாய்
காலம் என்ற தேவனோடு கடுமையாய்
உழைத்து எங்களை வாழவைத்தீர் அப்பா!
ஆண்டு மூன்று கடந்தாலும்
உங்கள் நினைவுகளுடன் வாழுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
077 669 1290

(CS/56261) J-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
26 . 08 . 1995



இறப்பு
17 . 09 . 2024

## தயாசீலன் வைஷ்ணவன்

(ஆசிரியர் வேம்படி உயர்தர மகளீர் கல்லூரி)

நுணாவில் மேற்கினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் தயாசீலன் வைஷ்ணவன் (ஆசிரியர் வேம்படி உயர்தர மகளீர் கல்லூரி) அவர்கள் கடந்த (17.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தயாசீலன் - லசிதா தம்பதியரின் அன்பு மகனும், துவாரகா (கனடா), கார்த்திகா (ஆசிரியர் - இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நிர்மலகாந் (கனடா), துஷேந்தன் (அபிபான்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஷ்ணுகாந், பீமன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புப் பேரனும், பகீரதன் மற்றும் டிலக்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மயூரன், நிருத்திகா ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரசேகரம், ஜெயந்தா ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (23.09.2024) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் (தம்பு ஒழுங்கை, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி) கிரிகைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தம்பு ஒழுங்கை,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
க.துசேந்தன்
076 804 6141

(CS/1419) J-1

# மரண அறிவித்தல்



## வைத்திலிங்கம் நடராஜா

(மூத்த கணக்காய்வாளர் அரச கணக்காய்வுத் திணைக்களம்
Superintendent audit Depatment)

யாழ். அனலைதீவைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்டிருந்த வைத்திலிங்கம் நடராஜா அவர்கள் கடந்த 21.09.2024 சனிக்கிழமை காலை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜ துரை-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் வசந்தகோகிலா (லீலா)வின் அன்புக் கணவரும், இளங்கோ (பிரான்ஸ்), மணிவண்ணன் (பிரித்தானியா), தமயந்தி (கனடா), ஜானகி (பிரித்தானியா), வாசுகி (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ருனித்தா, விஜிதா, சிங்காரவேலன், பஞ்சகுமார், இராகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சோதியா, பாறிலா, இளமாறன் (செல்வன்) - ஆதிகேசவன், குந்தவை - நிதுஷா, சௌமிகா - நிருத்திகா, பிரணவக்குமரன்- சாரண்யா, சத்தியன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, இராதபுஷ்பம், விஜயலட்சுமி, காலஞ்சென்ற புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2024) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணி யளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள்
கணேசு செல்வகுமார் (பெறாமகன்) -
இந்திராணி

தொடர்புகளுக்கு: 00 94 21 222 5635
00 94 76 994 5829

(CS/1424) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் தொகுதி முடிவுகள்

## யாழ். மாவட்டம்



1,21,177
32.60%



116,688
31.39%



84,558
22.75%



27,086
7.29%



800
0.22%

### நல்லூர்

| | | |
|---|---|---|
| ப.அரியநேந்திரன் | 10,097 | 32.03% |
| ரணில் விக்கிரமசிங்க | 8,804 | 27.93% |
| சஜித் பிரேமதாஸ | 7,464 | 23.68% |
| அநுரகுமார திஸாநாயக்க | 3,835 | 12.16% |
| நாமல் ராஜபக்ச | 76 | 0.24% |

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| ப.அரியநேந்திரன் | 7,494 | 30.23% |
| ரணில் விக்கிரமசிங்க | 7,080 | 28.56% |
| சஜித் பிரேமதாஸ | 7,058 | 28.48% |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,186 | 8.82% |
| நாமல் ராஜபக்ச | 43 | 0.17% |

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 10,956 | 35.13% |
| ப.அரியநேந்திரன் | 9,159 | 29.37% |
| ரணில் விக்கிரமசிங்க | 6,160 | 19.75% |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,692 | 8.63% |
| நாமல் ராஜபக்ச | 75 | 0.24% |

### காங்கேசன்துறை

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 8,708 | 31.56% |
| ப.அரியநேந்திரன் | 8,365 | 30.32% |
| ரணில் விக்கிரமசிங்க | 6,587 | 23.87% |
| அநுரகுமார திஸாநாயக்க | 1,935 | 7.01% |
| நாமல் ராஜபக்ச | 66 | 0.24% |

### கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 30,571 | 47.33% |
| ப.அரியநேந்திரன் | 20,348 | 31.51% |
| ரணில் விக்கிரமசிங்க | 7,182 | 11.12% |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,805 | 4.34% |
| நாமல் ராஜபக்ச | 102 | 0.16% |

### ஊர்காவற்றுறை

| | | |
|---|---|---|
| ப.அரியநேந்திரன் | 5,726 | 35.40% |
| ரணில் விக்கிரமசிங்க | 5,155 | 31.87% |
| சஜித் பிரேமதாஸ | 3,687 | 22.80% |
| அநுரகுமார திஸாநாயக்க | 593 | 3.67% |
| நாமல் ராஜபக்ச | 31 | 0.19% |

### வட்டுக்கோட்டை

| | | |
|---|---|---|
| அரியநேந்திரன் | 11,170 | 35.36% |
| சஜித் பிரேமதாஸ | 8,749 | 27.70% |
| ரணில் விக்கிரமசிங்க | 7,367 | 23.32% |
| அநுரகுமார திஸாநாயக்க | 1,887 | 5.97% |
| நாமல் ராஜபக்ச | 80 | 0.25% |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| ப.அரியநேந்திரன் | 8,658 | 37.66% |
| சஜித் பிரேமதாஸ | 6,100 | 26.54% |
| ரணில் விக்கிரமசிங்க | 5,162 | 22.46% |
| அநுரகுமார திஸாநாயக்க | 1,806 | 7.86% |
| நாமல் ராஜபக்ச | 47 | 0.2% |

### உடுப்பிட்டி

| | | |
|---|---|---|
| ப.அரியநேந்திரன் | 8,467 | 37.49% |
| சஜித் பிரேமதாஸ | 5,996 | 26.55% |
| ரணில் விக்கிரமசிங்க | 5,259 | 23.29% |
| அநுரகுமார திஸாநாயக்க | 1,670 | 7.39% |
| நாமல் ராஜபக்ச | 36 | 0.16% |

### கோப்பாய்

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 12,639 | 33.90% |
| ப.அரியநேந்திரன் | 11,410 | 30.60% |
| ரணில் விக்கிரமசிங்க | 7,654 | 20.53% |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,541 | 6.81% |
| நாமல் ராஜபக்ச | 81 | 0.22% |

### மானிப்பாய்

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 11,609 | 31.10% |
| அரியநேந்திரன் | 11,587 | 31.04% |
| ரணில் விக்கிரமசிங்க | 8,871 | 23.76% |
| அநுரகுமார திஸாநாயக்க | 2,886 | 7.73% |
| நாமல் ராஜபக்ச | 84 | 0.23% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மாவட்ட தேர்தல் தொகுதி முடிவுகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
|  | 95,422<br>43.92% |  | 52,573<br>24.20% |  | 36,377<br>16.74% |  | 21,412<br>9.86% |

## மன்னார்

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 28,491 | 44.93% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 17,181 | 27.09% |
|  | ப.அரியநேந்திரன் | 10,757 | 16.96% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 4,276 | 6.74% |
|  | நாமல் ராஜபக்ச | 125 | 0.20% |

## வவுனியா

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 33,731 | 39.31% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 24,018 | 27.99% |
|  | ப.அரியநேந்திரன் | 11,650 | 13.58% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 11,591 | 13.51% |
|  | நாமல் ராஜபக்ச | 671 | 0.78% |

## முல்லைத்தீவு

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 28,301 | 51.19% |
|  | ப.அரியநேந்திரன் | 12,810 | 23.17% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 7,117 | 12.87% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 3,453 | 6.25% |
|  | நாமல் ராஜபக்ச | 215 | 0.78% |

## கொழும்பு

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 6,29,963 | 47.21% |
|  | சஜித் பிரேமதாஸ | 3,42,108 | 25.64% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 2,81,436 | 21.09% |
|  | நாமல் ராஜபக்ச | 30,432 | 2.28% |
|  | ப.அரியநேந்திரன் | 3,168 | 0.24% |

## கம்பஹா

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 8,09,410 | 55.50% |
|  | சஜித் பிரேமதாஸ | 3,49,550 | 23.97% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 2,16,028 | 14.81% |
|  | நாமல் ராஜபக்ச | 41,193 | 2.82% |
|  | திலித் ஜயவீர | 17,143 | 1.18% |

## களுத்துறை

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 3,87,764 | 47.43% |
|  | சஜித் பிரேமதாஸ | 2,36,307 | 28.91% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 1,43,285 | 17.53% |
|  | நாமல் ராஜபக்ச | 22,727 | 2.78% |
|  | திலித் ஜயவீர | 10,261 | 1.26% |

## கண்டி

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 3,94,534 | 42.26% |
|  | சஜித் பிரேமதாஸ | 3,23,998 | 34.71% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 1,62,707 | 17.43% |
|  | நாமல் ராஜபக்ச | 19,403 | 2.08% |
|  | திலித் ஜயவீர | 9,098 | 0.97% |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாத்தளை

| | | |
|---|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 1,40,544 | 41.37% |
| சஜித் பிரேமதாஸ | 1,21,803 | 35.85% |
| ரணில் விக்கிரமசிங்க | 53,829 | 15.84% |
| நாமல் ராஜபக்ச | 10,327 | 3.04% |
| திலித் ஜயவீர | 2,835 | 0.83% |

## நுவரெலியா

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 2,01,814 | 42.58% |
| ரணில் விக்கிரமசிங்க | 1,38,619 | 29.25% |
| அநுரகுமார திஸாநாயக்க | 1,05,057 | 22.17% |
| நாமல் ராஜபக்ச | 8,821 | 1.86% |
| திலித் ஜயவீர | 2,003 | 0.42% |

## காலி

| | | |
|---|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 3,66,721 | 51.45% |
| சஜித் பிரேமதாஸ | 1,89,555 | 26.59% |
| ரணில் விக்கிரமசிங்க | 1,07,336 | 15.06% |
| நாமல் ராஜபக்ச | 24,382 | 3.42% |
| திலித் ஜயவீர | 8,263 | 1.16% |

## மாத்தறை

| | | |
|---|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 2,87,662 | 52.46% |
| சஜித் பிரேமதாஸ | 1,47,462 | 26.89% |
| ரணில் விக்கிரமசிங்க | 79,249 | 14.45% |
| நாமல் ராஜபக்ச | 14,962 | 2.73% |
| திலித் ஜயவீர | 7,316 | 1.33% |

## கம்பாந்தோட்டை

| | | |
|---|---|---|
| அநுரகுமார திஸாநாயக்க | 2,21,913 | 51.96% |
| சஜித் பிரேமதாஸ | 1,31,503 | 30.79% |
| ரணில் விக்கிரமசிங்க | 33,217 | 7.78% |
| நாமல் ராஜபக்ச | 26,707 | 6.25% |
| திலித் ஜயவீர | 2,978 | 0.70% |

## மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| சஜித் பிரேமதாஸ | 1,39,110 | 43.66% |
| ரணில் விக்கிரமசிங்க | 91,132 | 28.60% |
| அநுரகுமார திஸாநாயக்க | 38,832 | 12.19% |
| ப.அரியநேந்திரன் | 36,905 | 11.58% |
| நாமல் ராஜபக்ச | 559 | 0.18% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திகாமடுல்ல

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 200,384 | 47.33% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 108,971 | 25.74% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 86,589 | 20.45% |
|  | ப.அரியநேந்திரன் | 9,985 | 2.36% |
|  | நாமல் ராஜபக்ச | 7,570 | 1.79% |

## திருகோணமலை

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 120,588 | 50.36% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 49,886 | 20.83% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 40,496 | 16.91% |
|  | ப.அரியநேந்திரன் | 18,524 | 7.74% |
|  | நாமல் ராஜபக்ச | 2,183 | 0.91% |

## குருநாகல்

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 544,763 | 48.20% |
|  | சஜித் பிரேமதாஸ | 368,290 | 32.58% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 146,520 | 12.96% |
|  | நாமல் ராஜபக்ச | 38,730 | 3.43% |
|  | திலித் ஜயவீர | 7,532 | 0.67% |

## புத்தளம்

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 207,134 | 44.06% |
|  | சஜித் பிரேமதாஸ | 173,382 | 36.88% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 60,719 | 12.92% |
|  | நாமல் ராஜபக்ச | 13,285 | 2.83% |
|  | திலித் ஜயவீர | 3,003 | 0.64% |

## அநுராதபுரம்

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 285,944 | 47.37% |
|  | சஜித் பிரேமதாஸ | 202,289 | 33.51% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 82,152 | 13.61% |
|  | நாமல் ராஜபக்ச | 15,029 | 2.49% |
|  | திலித் ஜயவீர | 3,696 | 0.61% |

## பொலநறுவை

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 130,880 | 46.12% |
|  | சஜித் பிரேமதாஸ | 100,730 | 35.49% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 36,908 | 13.00% |
|  | நாமல் ராஜபக்ச | 5,594 | 1.97% |
|  | திலித் ஜயவீர | 1,727 | 0.61% |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பதுளை

| | | | |
|---|---|---|---|
|  | சஜித் பிரேமதாஸ | 219,674 | 38.61% |
|  | அநுரகுமார திஸாநாயக்க | 197,283 | 34.68% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 115,138 | 20.24% |
|  | நாமல் ராஜபக்ச | 13,869 | 2.44% |
|  | திலித் ஜயவீர | 3,042 | 0.53% |

## மொனராகலை

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 140,269 | 41.86% |
|  | சஜித் பிரேமதாஸ | 134,238 | 40.06% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 35,728 | 10.66% |
|  | நாமல் ராஜபக்ச | 12,832 | 3.83% |
|  | திலித் ஜயவீர | 2,286 | 0.68% |

## இரத்தினபுரி

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 291,708 | 39.32% |
|  | சஜித் பிரேமதாஸ | 257,721 | 34.74% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 145,038 | 19.55% |
|  | நாமல் ராஜபக்ச | 20,575 | 2.77% |
|  | திலித் ஜயவீர | 7,629 | 1.03% |

## கேகாலை

| | | | |
|---|---|---|---|
|  | அநுரகுமார திஸாநாயக்க | 247,179 | 43.39% |
|  | சஜித் பிரேமதாஸ | 185,930 | 32.64% |
|  | ரணில் விக்கிரமசிங்க | 106,510 | 18.70% |
|  | நாமல் ராஜபக்ச | 11,722 | 2.06% |
|  | திலித் ஜயவீர | 4,619 | 0.81% |



5,740,179



342,781
2.57%



4,530,902



226,343
1.7%



2,299,767
17.27%

**அளிக்கப்பட்ட மொத்த வாக்கு**

13,619,916

**செல்லுபடியான வாக்குகள்**

13,319,616

**நிராகரிக்கப்பட்ட வாக்குகள்**

300,300

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்துக்கு

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக இரண்டாம் சுற்று வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திலேயே சஜித் பிரேமதாஸ அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். நாடளாவிய ரீதியில் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 867 வாக்குகளை சஜித்தும், ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 264 வாக்குகளை அநுரவும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-5)

| மாவட்டம் | சஜித் | அநுர |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 21,513 | 8,174 |
| வன்னி | 6,162 | 2,309 |
| திருகோணமலை | 4,119 | 1,930 |
| அநுராதபுரம் | 3,537 | 2,773 |
| புத்தளம் | 3,103 | 2,149 |
| மட்டக்களப்பு | 7,191 | 4,467 |
| திகாமடுல்ல | 4,814 | 3,391 |
| அம்பாந்தோட்டை | 3,093 | 1,763 |
| மொனராகலை | 1,820 | 1,395 |
| பதுளை | 4,760 | 3,437 |
| குருநாகல் | 7,920 | 6,408 |
| கொழும்பு | 35,488 | 17902 |
| கண்டி | 9,188 | 8,020 |
| மாத்தளை | 2,211 | 1,909 |
| மாத்தறை | 4,505 | 3,130 |
| களுத்துறை | 8,517 | 6,135 |
| கேகாலை | 4,314 | 3,869 |
| இரத்தினபுரி | 6,022 | 4,888 |
| பொலநறுவை | 1,841 | 1,041 |
| காலி | 5,828 | 4,714 |
| நுவரேலியா | 5,440 | 3,162 |
| கம்பஹா | 16,683 | 12,217 |
| மொத்தம் | 167,867 | 105,264 |

## யாழ்ப்பாணம்...

ஒட்டுமொத்த வாக்களிப்பின் 6.39 சதவீதமாகும். இலங்கையின் எந்தவொரு தேர்தல் மாவட்டத்திலும் வாக்களிப்பு நிராகரிப்பு வீதம் 5 சதவீதத்தை தாண்டவில்லை. இதேவேளை வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 9 ஆயிரத்து 381 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இது வாக்களித்தோர் தொகையில் 4.14 சதவீதமாகும்.

(அ-ஒ-5)

| மாவட்டம் | நிராகரிக்கப்பட்ட வாக்கு | சதவீதம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 25,353 | 6.39% |
| வன்னி | 9,381 | 4.14% |
| திருகோணமலை | 5,821 | 2.37% |
| அநுராதபுரம் | 9,782 | 1.5% |
| புத்தளம் | 8,279 | 1.7% |
| மட்டக்களப்பு | 8,876 | 2.71% |
| திகாமடுல்ல | 6,563 | 1.53% |
| அம்பாந்தோட்டை | 6,443 | 1.4% |
| மொனராகலை | 6,671 | 1.9% |
| பதுளை | 15,519 | 2.65% |
| குருநாகல் | 19,337 | 16% |
| கொழும்பு | 31,796 | 2.33% |
| கண்டி | 24,153 | 2.5% |
| மாத்தளை | 7,921 | 2.27% |
| மாத்தறை | 9,687 | 1.7% |
| களுத்துறை | 16,243 | 1.9% |
| கேகாலை | 11,878 | 2.04% |
| இரத்தினபுரி | 15,070 | 1.9% |
| பொலநறுவை | 4,962 | 1.7% |
| காலி | 12,541 | 1.7% |
| நுவரேலியா | 14,643 | 1.9% |
| கம்பஹா | 29,381 | 1.97% |

## வரலாற்றில்...

துயரங்களை முடிந்தளவு நீக்கினேன். புதிய ஜனாதிபதி அவருக்குக் கிடைத்த மக்கள் ஆணையின் பிரகாரம் சரியான பாதையைத் தெரிவு செய்து மக்களின் துயரங்களை நீக்குவார் என நான் எதிர்பார்க்கிறேன். இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளையடுத்து தோல்வியடைந்த ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதித் தேர்தலில் இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தீர்மானமொன்றை வழங்கியுள்ளனர். நாம் அந்தத் தீர்மானத்துக்கு மதிப்பளிக்கவேண்டும். அந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை அரசின் நல்லிருப்பை உறுதிப்படுத்தவேண்டும்.

இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வங்குரோத்து அடைந்து, பொருளாதார நெருக்கடி காரணமாக கடுமையாக வீழ்ச்சிடைந்திருந்த, மிகவும் கடினமானதொரு சூழ்நிலையில் நான் இந்த நாட்டைப் பொறுப்பேற்றேன். அந்தச் சவாலுக்கு முகங்கொடுக்கின்ற அளவிலான ஆத்ம சக்தி பெரும்பாலானோருக்கு இல்லாதிருந்த சந்தர்ப்பத்திலேயே நான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன். வரலாறு எனக்கு வழங்கிய அந்தப் பொறுப்பை நான் சிறப்பாக நிறைவேற்றினேன்.

இரண்டு வருட குறுகிய காலப்பகுதியினுள் என்னால் இந்த நாட்டினை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டெடுக்க முடிந்தது. எனது அரசியல் வாழ்வில் எனது நாட்டுக்காகச் செய்யக் கிடைத்த பெறுமதியான கடமைப் பொறுப்பு அதுவாகும் என நான் நம்புகிறேன்.

நான் நாட்டைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் நூற்றுக்கு எழுபது வீதமாகக் காணப்பட்ட பணவீக்கத்தை பூச்சியம் தசம் ஐந்து சதவீதம் வரை என்னால் குறைக்க முடிந்தது. இருபது மில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்ட இந் நாட்டின் வெளிநாட்டுக் கையிருப்பை ஐந்து தசம் ஏழு பில்லியன் அமெரிக்க டொலராக என்னால் அதிகரிக்க முடிந்தது. அத்துடன் டொலருடன் ஒப்பிடுகையில் முந்நூற்று எண்பதாகக் காணப்பட்ட ரூபாவின் பெறுமதியை 300 ரூபா வரை குறைத்து, பலமான நிலையான பெறுமதிக்கு என்னால் அதனைக் கொண்டு வர முடிந்தது. அத்துடன் மறை ஏழு தசம் மூன்றாக காணப்பட்ட பொருளாதார வளர்ச்சியை நேர் இரண்டு தசம் மூன்று வரை அதிகரிப்பதற்கு நான் நடவடிக்கை மேற்கொண்டேன். அதுபற்றியும், எனது அந்த வரலாற்று முக்கியத்துவம் மிக்க அரசியல் கடமைப் பொறுப்பு பற்றியும் இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததியினர் உரிய மதிப்பீடொன்றை வழங்குவார்கள் என நம்புகிறேன்.

மிகவும் சவால் மிகுந்த தொங்குபாலத்தில் இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் முடிந்தளவு அதிகபட்ச தூரம் பாதுகாப்பாகக் கொண்டு வந்தேன். தொங்குபாலத்தின் முடிவிடம் கண்களுக்கு மிகவும் எட்டும் தூரத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்தப் பாசம் மிகுந்த குழந்தையை அநுரகுமார திஸாநாயக்கவிடம் ஒப்படைப்பதற்கு நாட்டு மக்கள் தீர்மானித்துள்ளனர். அநுர ஜனாதிபதி அவர்களே, நீங்களும் நானும் அன்பு வைத்துள்ள இலங்கை எனும் பாசம் மிகுந்த குழந்தையை நான் மிகவும் கருணையுடன் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் குழந்தையை நான் கொண்டு வந்ததை விடவும் பாதுகாப்பாக தொங்குபாலத்தின் முடிவிடத்துக்கு கொண்டு செல்லும் ஆற்றல் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், பதவிகளை வகித்தாலும் வகிக்காவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை ஏற்புடைய சந்தர்ப்பங்களில் எந்தவிதமான தயக்கமும் இன்றி நான் நிறைவேற்றுவேன். அத்துடன், எனது ஆட்சிக் காலத்தினுள் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய, வழங்காத அனைவருக்கும், இந்த நாட்டின் சகல பிரஜைகளுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் - என்றார். (அ-ஒ-5-26)

## 2 ஆம்...

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணிக்கையில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியுள்ளது. தேவையேற்படின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில வாக்கு எண்ணும் மையங்களில் தமது கட்சியின் முகவர்கள் இன்றி விருப்பு வாக்கு எண்ணப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

'கட்சி முகவர்கள் முன்னிலையில் இரண்டாவது விருப்பு தேர்வு எண்ணப்பட வேண்டும் என கேட்டுக்கொண்ட போதிலும் வாக்கு எண்ணும் மையங்களுக்குள் முகவர்கள் அனுமதிக்கப்படவில்லை' என குற்றம் சுமத்தியுள்ளார். (அ-ஒ-இ)


காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு

மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

20 அடி தார் பாதை

நல்ல சுற்றாடல்

செம்மண், நல்ல குடிநீர்



தொடர்பு:-

077 104 8865

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

கடந்த 05.10.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் சிதம்பரப்பிள்ளை சுந்தரேஸ்வரன்

(ஜெயகிருஸ்ணா)





தோற்றம்
23.02.1964

மறைவு
05.10.2023

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி வணக்க நிகழ்வும் இன்று (23.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் - என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும் அன்பு நிறை அப்பாவே!
ஆண்டுகள் ஒன்று ஆனதே பிரிந்து...
நீறாகிப் போனாலும் நீங்களே திசைகாட்டி
நித்திய வாழ்வினில் நீங்கா நிறையுரு
அணையாது ஒருபோதும் நாம் கொண்ட பாசம்...
தேயாமல் வளருமிது தெய்வீக பாசம்!
இயற்கையின் அசைவுகளில் - உம்
உணர்வுகளை நுகர்ந்து
உம்பாதம் மலர் தூவி வணங்குகிறோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இல.05,
ஐயனார் கோவில் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 004 5710
077 772 2589

(CS/56239) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.